# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை கிராமம், பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035.
(Pension Pay Office Back Side) (சைதாப்பேட்டை மெட்ரோ ரயில் நிலையம் அருகில்), தொலைபேசி: 044-29515590

**ஆணை நாள் – 08.04.2026**

**முன்னிலை**

**திரு மு. நடேசன், எம்.எஸ்சி., எல்.எல்.பி.,**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண்.SA.20529/C/2023**

திரு A. விஸ்வநாதன் .. மனுதாரர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர் /
மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது),
மாவட்ட ஆட்சியர் அலுவலகம், நாமக்கல் - 637 001. .. பொது அதிகார அமைப்பு

*************

**இறுதி ஆணை**

*மேற்படி வழக்கானது 06.01.2026 அன்று இவ்வாணையத்தில் நேரடி விசாரணை மேற்கொண்டு பிறப்பிக்கப்பட்ட உத்தரவில், மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, சட்டப்பிரிவு 6(1) மனுவில் கோரியுள்ள நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு வட்டம், கிராம சர்வே எண்.76 மல்லசமுத்திரம் கீழ்முக கிராமத்தினுடைய கிராம வரைபடத்தை கோரியுள்ளார் என்றும், அவற்றினை மனுதாரருக்கு முழுமையாக 'தகவல் பெறும் உரிமைச் சட்டப்படி தகவல்கள் வழங்கப்படுகிறது' என்ற முத்திரையுடன் ஒவ்வொரு பக்கத்திலும் சான்றொப்பமிட்டு, மனுதாரருக்கு தகவல்களாக அனுப்பிவைத்து, மனுதாரர் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அட்டையின் நகல் மற்றும் அவருக்கு வழங்கப்பட்ட தகவல்களின் நகல்கள் ஆகியவற்றினை இவ்வாணையத்தில் நேரில் ஆஜராகி சமர்ப்பிக்குமாறு பொதுத் தகவல் அலுவலருக்கு உத்தரவிடப்பட்டிருந்த நிலையில், பொதுத் தகவல் அலுவலர் திருமதி வ. சந்தியா, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது), மாவட்ட ஆட்சியர் அலுவலகம், நாமக்கல் மாவட்டம் என்பவருக்கு பதிலாக திரு M. ராஜசேகர், உதயிவாளர், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், நாமக்கல் மாவட்டம் என்பவர்* ***08.04.2026*** *அன்று நேரில் ஆஜராகி, மனுதாரரின் மனுவில் கோரியுள்ள நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு வட்டம், கிராம சர்வே எண்.76 மல்லசமுத்திரம் கீழ்முக கிராமத்தினுடைய கிராம வரைபடம் சம்பந்தமாக மனுதாரருக்கு ந.க.எண்.100/2026/சி3 நாள் 11.03.2026 தேதியிட்டு தகவல்கள் அனுப்பப்பட்டுள்ளது எனத் தெரிவித்து, அதற்கான ஆவண நகல்கள் மற்றும் ஒப்புகை அட்டையின் நகல் ஆகியவற்றினை இவ்வாணையத்தின் பார்வைக்கும் பொதுத் தகவல் அலுவலர் சமர்ப்பித்தார். பொதுத் தகவல் அலுவலரின் வாயிலாக மனுதாரருக்கு வழங்கப்பட்ட தகவல்களை இவ்வாணையம் கவனமுடன்*

*பரிசீலனை செய்கையில், மனுதாரருக்கு அத்தகவல்கள் போதுமானது எனக்கருதி, மனுதாரரின் இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் மீதான விசாரணையை இவ்வாணையம் இத்துடன் முற்றாக்கம் செய்து ஆணையிடப்படுகிறது.*

**ஒம்/- (மு. நடேசன்)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**வழக்கு எண்.SA.20529/C/2023**
**பெறுநர்**
**பொது அதிகார அமைப்பு:-**
பொதுத்தகவல் அலுவலர் /
மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது),
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
நாமக்கல் - 637 001.

**வழக்கு எண்.SA.20529/C/2023**
**மனுதாரர்**
திரு A. விஸ்வநாதன்,
எண்.35-B, காந்திஜி ரோடு, கோட்டமேடு,
மல்லசமுத்திரம் கீழ்முகம், மல்லசமுத்திரம் (அ),
திருச்செங்கோடு தாலுக்கா,
நாமக்கல் மாவட்டம் - 637 503.

Copy to: File
SNPS / 21.04.2026